## 11

# "கிறிஸ்துவின் சபையார்"

*"ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்; கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோமர் 16:16).*

நியாயாதிபதிகள் 11ல் யெப்தா அவரது படையினரை, அம்மோனியர்களுக்கு எதிராக ஒரு தீர்மானமான யுத்தத்தில் வழிநடத்தினார், ஆனால் அவருடைய வெற்றியானது கசப்பும் இனிப்பும் கலந்ததாக, மகிழ்வின் ஆர்ப்பரிப்பும், துயரின் கண்ணீரும் கலந்ததாக ஆயிற்று. யுத்தத்திற்கு முன்பு அவர் தேவனிடம் ஏற்படுத்திக் கொண்டிருந்த பொருத்தனையின் நிறைவேற்றத்திற்காகத் தன் மகளை அவர் பலியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் அவரது கொண்டாட்டம் இடை நிறுத்தப்பட்டது. அவர் தம் துக்கத்துடன் இருக்கையில், எப்பிராயீமருடன் ஒரு விவாதம் செய்யும்படி வலிந்து தள்ளப்பட்டார், இந்த விவாதமானது அவரது உறவினர்களுடன் ஒரு தீவிரமான முரண்பாடாக வெடித்தது (நியா. 12:1-7), இது பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்ட இஸ்ரவேலர்களின் முதல் உள்நாட்டுப் போராக ஆயிற்று.

எப்பிராயீமர்கள் யெப்தாவின் (யுத்தத்தினால் கடினப்பட்ட) மனிதர்களுக்குப் பொருத்தமானவர்களாய் இருந்தது இல்லை. அவருடைய மனிதர்கள் அவர்களைத் திறமையுடன் வெற்றி கொண்டு, எப்பிராயீமரின் எல்லைகளின் அருகிலிருந்த யோர்தான் நதியின் துறைகளைப் பிடித்தனர். எப்பிராயீமரில் தேடப்படுகிறவர்கள் யுத்தகளத்தில் இருந்து திரும்புகையில் அவர்களைக் கைது செய்வதற்காக, கடக்கும் துறைகள் தற்காலிகச் சாலைத் தடைகளாக்கப்பட்டன.

அந்தத் தடை நிலையங்களில் நிறுத்தப்படும் எந்த எப்பிராயீமரும் கண்டுபிடிக்கப்படுதலில் இருந்து தப்பிப்பதற்காகத் தங்கள் இனத் தொடர்பை மறுப்பார்கள் என்று அறிந்திருந்த யெப்தா, உண்மையான எப்பிராயீமர் எவரும் வெற்றிகரமாய்த் தேற முடியாத ஒரு சோதனையைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தினார். தடைநிலைகளினூடே வரும் ஒவ்வொருவரையும் "ஷிபொலேத்" என்று கூறும்படிக் கேட்குமாறு அவர் தம் மனிதர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். எப்பிராயீமர்கள் தங்கள் பின்னணி மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றினால், "ஷி" என்ற ஒலியை "சி" என்பதாக உச்சரித்தார்கள். அவர்கள் சிந்தனை எதுவுமின்றி "ஷிபொலேத்" என்பதற்குப் பதிலாக "சிபொலேத்" என்று கூறினார்கள். துறைகளில் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த எப்பிராமீயர்கள் யெப்தாவின் இந்தச் சிறு சூழ்ச்சி

யினால் சுலபமாய்க் கண்டறியப்பட்டார்கள், மற்றும் அந்த நதியோரத்தில் நாற்பத்தியிரண்டாயிரம் எப்பிராமீயர்கள் கொல்லப்பட்டார்கள்.

இஸ்ரவேலரின் வரலாற்றில் உள்ள வழக்கத்திற்கு மாறான இந்த நிகழ்ச்சியானது, ஒரு வார்த்தை - ஒரு சிறு ஒலி - என்பது வாழ்வா மரணமா என்ற விளைவைக் கூட ஏற்படுத்தும் வகையில், மிகத் தொலைவில் சென்றடையும் மறைகருத்துள்ளதாகும் என்று விவரிக்கின்றது. சில வேளைகளில், சிறு வார்த்தைகள் பெரிய அர்த்தம் கொண்டவையாய் உள்ளன!

“சிறியவற்றின் தனிச் சிறப்பு” என்பதன் இவ்வுண்மையை நாம் நமது கர்த்தருக்கும் மற்றும் புதிய ஏற்பாட்டின் செய்திக்கும் பயன்படுத்துவோம். வேத வசனங்களின் சொற்களும் சொற்றொடர்களும் முற்றான உண்மையைத் தெரிவிப்பதினால், அர்ப்பணிப்புள்ள ஒவ்வொரு சீஷரும் வேத வசனங்கள் கூறுவது என்ன என்பதையும் அவை அவற்றை எவ்விதம் கூறுகின்றன என்பதையும் கவனமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

வேத வசனங்களில் ஒரு வார்த்தையானது முதலில், கவனத்தைக் கவரும் தன்மை இல்லாதது போலத் தோற்றம் அளிக்கலாம்; ஆனால் நாம் நேர்மையான உன்னிப்புடன் காண்கையில், அவ்வார்த்தையானது அசாதாரணமான அர்த்தம் கொண்டிருப்பது நமக்குப் புலப்படும். உதாரணமாக, ரோமர் 16:16ல் உள்ள ‘‘கிறிஸ்துவின் சபையார்’’ என்ற சொற்றொடரானது சந்தர்ப்பப் பொருளில் காட்சியினுடைய பாகமாக மட்டும் தோன்றி, வாசிப்பவருக்கு அது அவ்வசனத்தில் விசேஷித்த பணிப் பொறுப்பு எதையும் பெற்றிராதது போலவும், உண்மைச் செய்தி எதையும் கொண்டிராதது போலவும் தோற்றம் அளிக்கின்றது. இருப்பினும் இச்சொற்றொடரை ஆராய்ந்து பார்க்கையில், இது முக்கியத்துவத்தினால் சக்தியூட்டப் பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

யாரேனும் ஒருவர், “நாம் சபையை எவ்வாறு குறிப்பிடுகின்றோம் என்பது எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்துவதில்லை. பெயர்களும் பட்டப் பெயர்களும் எதையும் அர்த்தப்படுத்துவதில்லை. நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள் என்பதுதான் முக்கியமானதே தவிர, நீங்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறீர்கள் என்பது முக்கியமானதல்ல” என்று கூறலாம். இது உண்மையிலேயே நிஜமாய் உள்ளதா? யெப்தா இவ்விதமான விவாதத்தை ஏற்படுத்தியிருக்க மாட்டார் என்பது உறுதியானது. ஒருவர் பேசுகின்ற வழிமுறையானது அவரை அடையாளப்படுத்துகின்றது என்பதை அவர் அறிந்தார். அடையாளத்தினாலும் வாழ்வினாலும் நாம் தனிச் சிறப்பானவர்களாய் இருக்க வேண்டும் என்று தேவன் நமக்கு அர்த்தப்படுத்தியுள்ளார். இவ்விதமாக, ஒரு கிறிஸ்தவர் தம்மை ஒரு “நாத்திகர்” என்றோ அல்லது ‘‘விக்கிரகாராதனைக்காரர்’’ என்றோ அழைத்துக் கொள்ள மாட்டார் அல்லது சரியில்லாததான வேறு எவ்வழியிலாவது தம்மைக் குறிப்பிட்டுக் கொள்ள மாட்டார். நாம் ஒவ்வொரு பகுதியும் - நமக்கு நாம் பயன்படுத்திக் கொள்ளும் பெயர்களும் கூட - நாம் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள் என்று அறிவிக்க வேண்டியதாக உள்ளது.

சபையாரை பரிசுத்த ஆவியானவர், “கிறிஸ்துவின் சபையார்” என்று

ஏன் குறிப்பிட்டார்? ஏதேனும் சந்தேகம் உள்ளதா? சபையானது கிறிஸ்துவின் சபையாக உள்ளது! உண்மையில், விவரிப்பான இந்தச் சொற்றொடரானது புதிய ஏற்பாட்டின் சபையினுடைய இயல்பின் மீது இன்னும் சற்று வெளிச்சத்தை வீசுகின்றது. இதை நாம் கவனத்துடன் சிந்தித்து, இதில் காணப்படும் சத்தியங்களைக் கண்டறிவோம்.

## ஆவிக்குரிய உண்மை நிலை

முதலாவது, சபையானது வாழ்கின்ற ஒரு உண்மை நிலை, இருக்கின்ற ஒரு உயிருள்ள ஜீவி என்பதை (வசனக்) குறிப்பானது தெரிவிக்கின்றது. சபையானது இனியும், வருவதாயிருக்கும் ஒரு வாக்குத்தத்தமாக இருப்பதில்லை, ஆனால் இது ஒரு நிகழ் கால உண்மையாக, வந்திருந்த ஒன்றாக இருந்தது என்று இது முன்கூட்டி உரைக்கின்றது. பவுலினால் ரோமர் 16:16 எழுதப்பட்ட வேளையில், சபையானது ரோம சாம்ராஜ்யம் முழுவதிலும் பரவியிருந்தது. பவுல் இதை எழுதும் பொழுது இந்த (நிலப்) பகுதியில் இருந்த கிறிஸ்துவின் சபையார், ரோமாபுரியில் இருந்த கிறிஸ்துவின் சபையாருக்குத் தங்கள் வாழ்த்துக்களை அனுப்பினார்கள்.

மோசேயின் யுகத்தினுடைய நீண்ட ஆண்டுகள் முழுவதிலுமாக, தீர்க்கதரிசிகள் தங்கள் தீர்க்கதரிசன அடையாளக் குறிப்புகள் மூலம், "கடைசி நாட்களின்" வருகையைச் சுட்டிக்காட்டியிருந்தார்கள், இந்தக் கடைசி நாட்களின் தொடக்கத்தில்தான் கர்த்தருடைய இராஜ்யமானது நிலைநாட்டப்படுவதாக இருந்தது (தானி. 2:44). இயேசு தமது ஊழியத்தின் தொடக்க காலத்தில், காலம் நிறைவேறிற்று என்பதாகப் பிரசங்கித்தார்: "யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம் நிறைவேறிற்று, தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்" (மாற். 1:14, 15). வர இருந்த இந்தப் பரலோக இராஜ்யத்தை இயேசு, தம் "சபை" என்று அழைத்தார், மற்றும் தாமே இதைக் கட்டுவதாக வாக்களித்திருந்தார் (மத். 16:18).

இயேசு பரத்துக்கேறிய நாளில் அப்போஸ்தலர்கள் ஒரு புதிய தொடக்க மானது அருகாமையில் இருந்தது என்று அறிந்தவர்களாய், தங்களிடம் அவர் கூறியதில் நம்பிக்கை கொண்டிருந்தனர் (அப். 1:4, 5). அவர்கள், "ஆண்டவரே, இக்காலத்திலா இராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்?" (அப். 1:6) என்று கேட்டார்கள். இயேசு அவர்களிடம், "பிதாவானவர் தம்முடைய ஆதினத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் பொழுது நீங்கள் பெலன(டைவீர்கள்)" (அப். 1:7, 8) என்று மறு உறுதியளித்தார். கிறிஸ்து பரத்துக்கேறி, பத்து நாட்களுக்குப் பிறகு, பெந்தெகொஸ்தேயன்று கர்த்தரால் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது பொழியப்பட்டார் (அப். 2:1-4). பேதுருவின் பிரசங்கத்திற்குப் பின், பிற்பாடு அந்த நாளில் மூவாயிரம் பேர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்று, கர்த்தரால் அவருடைய சபைக்குள் சேர்த்துக்

கொள்ளப்பட்டார்கள் (அப். 2:41, 47). ஏவுதல் பெற்ற தீர்க்கதரிசனம் மற்றும் இயேசுவின் முன்னுரைத்தல்கள் ஆகியவற்றின் நிறைவேற்றமாக இப்பொழுது சபையானது இருக்கத் தொடங்கியது. புதிய ஏற்பாட்டில் அப். 2ல் இருந்து, சபையானது நிகழ் காலத்தில் இருப்பதாகப் பேசப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில் இதன் பிறகு சபையானது இனிவரும் உயிர்ப் பொருள் என்ற வகையில் தீர்க்கதரிசனமாகச் சித்தரிக்கப்பட்டதில்லை.

பவுல் கி.பி. 56 அல்லது 57ல், கொரிந்து நகரிலிருந்து, ரோமருக்கான தமது நிருபத்தை எழுதி முடித்தார் என்று எண்ணப்படுகின்றது. நடபடிகளில் கொடுக்கப்பட்டுள்ள வரலாற்றின்படியாக, அந்த வேளையில் அகாயா, கிரேக்கு மற்றும் மெக்கதோனியா ஆகிய நாடுகளில் கிறிஸ்துவின் சபைகள் நிலைநாட்டப்பட்டிருந்தன. ரோமாபுரியில் கிறிஸ்துவின் சபையானது பல இடங்களில் நிலைநாட்டப்பட்டிருந்தது என்று ரோமருக்கு எழுதின நிருபமானது சுட்டிக்காட்டுகின்றது. இந்த உண்மை களின் கண்ணோக்கில், பவுல் ''கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்'' (ரோமர் 16:16) என்ற வாழ்த்துடன் தம் நிருபத்தை முடித்திருப்பது ஏற்புடையதாகவே இருந்தது.

பண்ணையில் நான் ஒரு சிறு பையனாக வளர்ந்து கொண்டிருந்த பொழுது, எனது சொந்தக் குதிரை என்று நான் அழைக்கக் கூடிய ஒரு சவாரிக் குதிரையைக் கொண்டிருத்தல் என்பது எனக்கு மிகவும் விருப்பமான கனவாக இருந்தது. எனது நண்பர்கள் குதிரைகளைக் கொண்டிருந்தனர், மற்றும் நான் கூட ஒரு குதிரை வைத்திருக்க விரும்பினேன். நானும் எனது நண்பர்களும் ஒன்றாக குதிரை சவாரி செய்தால் எவ்வளவு வேடிக்கையாக இருக்கும் என்ற சிந்தனை எனக்குள் எழும்போது, ஒரு குதிரையைச் சொந்தமாய்க் கொண்டிருக்க வேண்டும் என்ற எனது ஆவலானது மிகவும் தீவிரமாகியது. இந்த ஏக்கமானது விரைவிலேயே எனது மிகப் பெரும் பேராவலானது. அது மிகச் சரியற்ற தாயிருந்ததாக இப்பொழுது நான் உணர்ந்தாலும், அப்பொழுது நான் குதிரையைக் கொண்டிராவிட்டால், எனது வாழ்வு நிறைவுற்றதாயிராது என்றே உண்மையில் நான் நம்பினேன்.

பணம் பற்றாக் குறைவு இருந்த காரணத்தினால், எனது பதிமூன்றாம் வயது வரையிலும் எனது ஆவல் பூர்த்தியடையவில்லை. எங்களிடம் உழுவதற்கும் மற்ற எல்லா வேலைகளுக்கும் உபயோகப்படுத்தப்பட்டு ஓய்வு பெற்ற வயதான ஒரு குதிரை இருந்தது. எங்களுடைய இந்த வயதான குதிரையுடன் இன்னும் சில தொகையை சேர்த்துக் கொடுத்தால் எனது அயலகத்தார் தாங்கள் வைத்திருந்த இரண்டு வயதேயான குதிரை ஒன்றை எங்களுக்குத் தருவதாகக் கூறினார். நாங்கள் அவ்வாறே வர்த்தகப் பரிமாற்றம் செய்தோம், நான் மிக மகிழ்ச்சியான இளைஞனானேன் - எனது கனவு நனவான மகிழ்ச்சியில் நான் திளைத்தேன்.

எனது வாழ்வின் இந்த மகிழ்வான தருணத்தில் நான் ஒருக்காலும் எனது குதிரைக்குப் பெயரிடவில்லை என்பதுதான் ஆர்வம் தரும் ஒரு நிகழ்வாய் இருந்தது. இது வினோதமானதாக உள்ளது அல்லவா? நாங்கள் அந்தக் குதிரையை ரெக்ஸ் என்றோ டார்ச் என்றோ அல்லது வேறு எந்தப்

பெயரினாலுமோ அழைத்ததே இல்லை; அதை நாங்கள் "எடியின் குதிரை" என்று மட்டுமே குறிப்பிட்டோம். அந்தக் குதிரை எனக்கு மிகவும் விசேஷமானதாயிருந்தது, ஆனால் ஏதோ காரணத்தினால் நான் அதற்கு ஒருக்காலும் பெயரிடாதிருந்தேன். நான் அக்குதிரை மீதேறி எங்கள் பண்ணையில் இருந்த மலைகளின் மீது சவாரி செய்தேன் மற்றும் குதிரை அணி வகுப்பில் கூட ஓராண்டில் கலந்து கொண்டேன், ஆனால் நான் ஒருக்காலும் அதற்குப் பெயரிடவில்லை; அது எப்பொழுதும் "எடியின் குதிரையாகவே" இருந்தது.

''எடியின் குதிரை'' என்ற சொற்றொடரானது மிகவும் எளிமை யானதாகவும், கவர்ச்சியாக இல்லாததாக இருந்தாலும், இது சில உண்மை களை வெளிப்படுத்துகின்றது. ஒரு விஷயம் என்னவென்றால் இது இந்தக் குதிரையின் உரிமையாளர் யாரென்று கூறிற்று.

இது போலவே, புதிய ஏற்பாட்டின் சபை ஒரு பெயரைக் கொண்டிருப் பதில்லை. இது "கிறிஸ்துவின் சபைகள்," "தேவனுடைய சபைகள்" அல்லது "சபை" என்ற விவரிப்புச் சொற்றொடர்களினால் அடையாளப்படுத்தப் படுகின்றது. உண்மையில், சபைக்குப் பெயரைக் கொடுக்கப் புதிய ஏற்பாட்டின்படியான அதிகாரம் எதுவுமே இல்லை. சபை எங்கு கூடுகின்றது என்று நாம் அடையாளப்படுத்த முடியும், சபை யாருக்கு உரிமையான தென்று நாம் விவரிக்க முடியும் அல்லது சபையில் இருப்பவர்கள் யாரென்று நாம் கூற முடியும் - ஆனால் சபைக்கு ஒரு குறிப்பிட்ட பெயரைக் கொடுக்க நமக்கு அதிகாரம் இல்லை. இயேசு தம் சபைக்குப் பெயரிடுவதைப் பொருத்தமானதாகக் காணவில்லை; அவர் அதனை "என் சபை" (மத். 16:18) என்று மட்டுமே அழைத்தார்.

இன்னொரு விஷயம் என்னவென்றால், "எடியின் குதிரை" என்பது நான் எனது விருப்பத்தின்படியானதைப் பெற்றேன், அதாவது உண்மையிலேயே நான் ஒரு குதிரையைப் பெற்றுக் கொண்டேன் என்பதைச் சுட்டிக் காண்பித்தது. அது போலவே, "கிறிஸ்துவின் சபையார்" என்ற சொற்பொருள் விளக்கமானது கிறிஸ்துவின் சபை இங்கு உள்ளது, அதாவது கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறியுள்ளது என்பதைக் குறிக்கின்றது. இது நாம் இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் சபையாக வாழ முடியும் என்பதை நமக்கு நினைவூட்டுகின்றது. சபையானது முதல் நூற்றாண்டில் இருந்தது என்றால், அது இன்றைய நாட்களிலும் இருக்க முடியும், அவ்வாறே இருக்கின்றது. தேவனுடைய இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை நாம் மகிழ்வுடன் அனுபவிக்கும் முன்னர் தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்காக தாம் காத்திருக்கத் தேவையில்லை. தேவனுடைய நேர்மைத் தன்மையின் மீது முன்னுரைக்கப்பட்டதொரு உறுதிப்பாட்டுடன் நாம், இப்பொழுது இரட்சிப்பிற்கான கர்த்தருடைய வழியின் மூலமாக அவருடைய இராஜ்யத்தினுள் பிரவேசிக்கவும், அவரது இராஜ்யத்தின் குடிமக்களாக வாழவும் முடியும்.

கிறிஸ்துவின் சபையினுடைய பிரசன்னத்தில் நாம் இன்றைய நாளில் அகம் மகிழ்வோமாக. கிறிஸ்துவின் சபையானது உண்மை நிலையாக உள்ளது மற்றும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர்கள் எவராயிருப்பினும் - நாடு, இனம்

அல்லது கலாச்சார வேறுபாடு போன்றவை எதுவுமின்றி - ஒவ்வொருவராலும் அது மகிழ்வுடன் அனுபவிக்கப்பட முடியும் என்ற அற்புதம் நிறைந்த செய்தியை உலகுக்கு அறிவிப்பதில் என்னுடன் சேர்ந்து கொள்ளுங்கள்.

## பரிசுத்தமான உறவு

இரண்டாவது, ''கிறிஸ்துவின் சபையார்'' என்பது கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையில் நிலவுகின்ற விசேஷித்த ஒரு உறவைத் தெரிவிக்கின்றது. சபையானது கிறிஸ்துவால் தனிச் சிறந்த ஒரு வகையில் உரிமை கொள்ளப்பட்டுள்ளது.

சபையானது இயேசுவால் உண்டாக்கப்பட்டது மற்றும் இது அவருக்கே உரியது என்பது புதிய ஏற்பாட்டில் சபையைப் பற்றிய திறவுகோல் சிந்தனையாக உள்ளது. அவர் சபையைத் தோற்றுவித்தவராகச் சித்தரிக்கப்படுகின்றார். அவர், "மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை'' (மத். 16:18) என்றுரைத்தார். இயேசு சபையை மனிதருடையதாக அல்ல, ஆனால் தம்முடையதாகவே நினைத்தார். அவர் அதைத் தம் இரத்தத்தை விலை கொடுத்து வாங்கியதாகவும் சித்தரித்தார். எபேசுவின் மூப்பர்களுக்குப் பவுல், "தேவன் [இயேசு] தம் சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட சபையை மேய்ப்பதற்கு" (அப். 20:28) என்று கூறினார். இயேசு சிலுவையின் மீது தாம் பெற்ற தியாகமான மரணத்தினால் சபையை உண்டாக்கினார். அத்துடன், சபையானது இப்பூமியில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக முன்னிறுத்தப்படுகின்றது. பவுல், "எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்" (1 கொரி. 12:12) என்று எழுதினார்; "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" (1 கொரி. 12:27) என்றும் அவர் எழுதினார். அந்த சரீரத்துக்கு கிறிஸ்து தலையாக இருக்கிறார். பவுல், "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவர் ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற் பேறுமானவர்" (கொலோ. 1:18) என்று கூறினார். சபை என்பது கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தின் நிறைவேற்றமாக, அவரது மீட்பின் பலியிலிருந்து இயல்பாக விளைந்ததாக உள்ளது.

சபையுடன் கிறிஸ்து நிலைநிறுத்துகின்ற மாறுபட்ட எல்லா உறவுகளையும் நாம் மனதில் காத்துக் கொள்ளுகின்ற பொழுது, சபையைப் பவுல் "கிறிஸ்துவின் சபை" என்று கூறியது பற்றி நாம் திகைப்படைவதில்லை. சாத்தியமான ஆழமிக்க கருத்தில், சபை என்பது கிறிஸ்துவின் சபையாக உள்ளது. ஒருவர் கிறிஸ்துவின் சபையைப் பற்றிப் பிரசங்கிக்காமல் கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்க முடியாது, மற்றும் ஒருவர் கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்காமல் உண்மையான சபையைப் பற்றிப் பிரசங்கிக்க முடியாது. கிறிஸ்துவை உண்மையாகச் சார்ந்துள்ள எவரொருவரும்

அவருடைய சபையாக அவருக்கு ஊழியம் செய்வார். சரியான கிறிஸ்துவின் சபை என்பது தனது அடையாளத்தையும் பண்பையும் கிறிஸ்துவிடமிருந்து பெறுகின்றது, மற்றும் கிறிஸ்துவின் உண்மையான ஊழியர் கிறிஸ்துவின் சபையாய் இருப்பது தவிர வேறு எதுவாக இருப்பதையும் மறுத்து விடுவார். சபை என்பது கிறிஸ்துவால் உரிமை கொள்ளப்பட்டு, வழி நடத்தப் படுவதுடன் கூட, அது அவருடைய ஆவிக்குரிய சரீரமாக இப்பூமியில் நிலவுகின்றது.

செயல் வலிவும் விசுவாச நிறைவுமுள்ள சுவிசேஷ ஊழியரான காலஞ் சென்ற ஃபாய் L. ஸ்மித் அவர்கள், சபையின்மீது கிறிஸ்து கொண்டுள்ள உரிமைத்துவம் பற்றி தெளிவான விவரிப்பு ஒன்றைப் பயன்படுத்தினார். அவர், ஒருவேளை நீங்கள் ஒரு நாள் காலையில் உங்கள் வீட்டின் மேற்கூரையைச் சுத்தியால் உடைக்கும் சத்தம் கேட்டு விழித்தெழுகின்றீர் கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் படுக்கையை விட்டுத் தடுமாறி எழுந்து, உங்கள் காதுகளையே நம்ப முடியாத நிலையில் இருப்பீர்கள். நீங்கள் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிறீர்களா அல்லவா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள நீங்கள் உங்கள் தலையை அசைப்பீர்கள். நீங்கள் உறங்கவில்லை என்பதைக் கண்டு பிடிப்பீர்கள். நீங்கள் உங்களுக்குள்ளே, "யாரோ ஒருவர் என் வீட்டு மேற்கூரையில் வேலை செய்வது போல சத்தம் கேட்கின்றதே, ஆனால் நான் யாரையும் அவ்வாறு வேலை செய்யும்படி கேட்டுக் கொள்ளவில்லையே! என் வீட்டு மேற்கூரையில் யாரேனும் ஒருவர் ஏன் இருக்க வேண்டும்?" என்று கூறிக் கொள்கின்றீர்கள். நீங்கள் இன்னும் உங்கள் மாம்சத்தில்தான் இருக்கின்றீர்களா என்று உறுதியாய்க் காண நீங்கள் உங்களையே கண்ணாடியில் பார்த்துக் கொள்கின்றீர்கள். நீங்கள் பார்ப்பதினால் பயமுறுத்தப்பட்டாலும், நீங்கள் இப்பொழுது இன்னும் உங்கள் உடலில்தான் இருப்பதாக நிச்சயப்படுத்திக் கொள்கின்றீர்கள். வேக வேகமாக உடைகளை அணிந்து கொண்டு, என்ன நடக்கிறதென்று பார்க்க நீங்கள் வெளியே போகின்றீர்கள். நீங்கள் வெளியே சென்று, மேற்கூரையைப் பார்க்கின்றீர்கள். நீங்கள் முற்றிலும் திகைப்படையும்படி, உங்கள் மேற்கூரையின் மீது ஒரு மனிதர் உட்கார்ந்து கொண்டு, ஓடுகளைப் பிரித்து எறிந்து கொண்டுள்ளார். அவர் ஏற்கனவே உங்கள் கூரையின் ஒரு பகுதியைப் பிய்த்து எறிந்து விட்டார். இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த நீங்கள், "ஏய்! நீ என்ன செய்கிறாய்? எனது கூரையைப் பழுது பார்க்க நான் உன்னைக் கூலிக்கு அமர்த்தவில்லையே!" என்கிறீர்கள். அந்த மனிதரோ தைரியமாக, "ஐயா, நான் ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் உங்கள் வீட்டின் வழியே கடந்து சென்றுள்ளேன். ஒவ்வொரு நாளும் அவ்வாறு செல்லுகையில், உங்கள் வீட்டைப் பார்த்து விட்டு, 'இந்த வீடு கட்டப்பட்டுள்ள விதம் எனக்குப் பிடிக்கவில்லையே' என்று சொல்லிக் கொள்வேன். வாரக் கடைசியான இன்று எனக்குச் சற்று ஓய்வு நேரம் இருந்தபடியால், இங்கு வந்து உங்கள் வீட்டை எனது விருப்பத்திற்கு ஏற்ற வகையில் மாற்றிக் கொள்வதற்கு முடிவு செய்தேன். எனது உழைப்பு, பொருட்கள் அல்லது எனது புத்திசாலித் தனமான வடிவமைப்பு ஆகியவற்றிற்காக உங்களிடம் நான் கட்டணம் எதையும் வசூலிக்க மாட்டேன்" என்று பதில் அளிக்கின்றார்.

இந்த மனிதருக்கு நீங்கள் என்ன கூறுவீர்கள்? நீங்கள் அம்மனிதரைத் திருப்திப்படுத்துவதற்காக இவ்வீட்டைக் கட்டவில்லையென்றே கூறுவீர்கள். நீங்கள் உங்கள் குடும்பத்தின் தேவைகளைச் சந்திக்கவே இந்த வீட்டைக் கட்டினீர்கள் என்றும், அந்த மனிதர் உங்கள் வீட்டை விரும்பவில்லையென்றால் குறைந்தபட்சம் அவர் அதை அப்படியே விட்டு விடுவதுதான் அவர் செய்யக்கூடிய செயல் என்று நீங்கள் அவரிடம் கூறுவீர்கள். அதை மாற்றும் உரிமை அவருக்கில்லை, ஏனெனில் மாற்றுவதற்கு அது ஒன்றும் அவருடைய வீடல்ல என்பதை நீங்கள் அவருக்குத் தெளிவு படுத்துவீர்கள்.

*ஒருவர் கிறிஸ்துவின் சபையைப் பற்றிப் பிரசங்கிக்காமல் கிறிஸ்துவைப் பற்றியும் பிரசங்கிக்க முடியாது, மற்றும் ஒருவர் கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கிக்காமல் உண்மையான சபையைப் பற்றிப் பிரசங்கிக்க முடியாது.*

கர்த்தர் தம்முடைய சபையைப் பொறுத்தமட்டில் இதே போன்றதொரு பதில்செயலை மனிதரிடமிருந்து பெற்றிருக்கவில்லையா? மனிதர், “கர்த்தரே நீர் சபையை அமைத்துள்ள விதம் எனக்குப் பிடிக்கவில்லை. நான் அதை மாற்றப் போகின்றேன்” என்று கூறியுள்ளார்கள். முரட்டாட்டமான மதவியலாளர்கள் கர்த்தருடைய சபையை மனிதரால் உண்டாக்கப்பட்ட நிறுவனமாக மாற்றுவதைத் தங்கள் பணியாக ஏற்படுத்திக் கொண்டார்கள். இருப்பினும், பின்வருவது உண்மையாக இருக்கின்றது: நமது தனிப்பட்ட வீடு நமக்குச் சொந்தமாயிருப்பது போலவே, சபை கிறிஸ்துவுக்கு உரியதாக இருக்கின்றது. அதைக் குறித்து ஏதொன்றையும் மாற்றும் உரிமை எந்த மனிதருக்கும் அல்லது குழுவுக்கும் இருப்பதில்லை. இது கிறிஸ்துவின் சபையாக இருக்கின்றது.

கர்த்தருடைய சபையைக் குறித்து எவரொவரும் கொண்டுள்ள எந்த ஒரு விவாதமும் கிறிஸ்துவிடம் எடுத்துச் செல்லப்பட வேண்டும், ஏனெனில் சபையானது அவருடைய உரிமைத்துவத்தின் கீழும், அதிகாரத்தின் கீழும் இருக்கின்றது. அவர் இதன் தலையாக இருக்கின்றார், மற்றும் இது அவரது வடிவமைப்பின்படியாகவும் அவர் தேர்ந்து கொள்ளும் இயக்கத்தின் படியாகவும் இருக்கின்றது.

கிறிஸ்துவின் சபை என்ற வகையில் நாம் கிறிஸ்துவுடன் நமக்குள்ள விசேஷித்த உறவை ஒப்புக் கொள்வோமாக. அவருடைய சரீரம் என்ற வகையில், நாம் அவருடைய சித்தத்தைச் செய்வதற்காக வாழ்கின்றோம். நமக்குப் பவுலின் பின்வரும் வார்த்தைகள் எப்பொழுதும் ஏற்புடையவைகளாகவே உள்ளன: “இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால், நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே” (கலா. 1:10).

*மூன்றாவது, "கிறிஸ்துவின் சபையார்" என்ற சொல் விளக்கமானது வேத வசனங்களில் சபையை அடையாளப்படுத்தும் ஒரு வழிமுறையை வெளிப்படுத்துகின்றது. பவுல் ஆவியானவரால் இயக்கப்பட்டு, சபையைக் கிறிஸ்துவின் சபை என்று விவரித்தார்.*

*உலகிற்கு இயேசுவின் சபை வந்த நிகழ்வானது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாக இருந்தது, இது பழைய ஏற்பாடும் மற்றும் புதிய ஏற்பாட்டின் முற்பகுதியும் (நான்கு சுவிசேஷங்கள்) எதிர்நோக்கியிருந்த நிகழ்ச்சியாக இருந்தது. பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டின் முற்பகுதி ஆகியவற்றின் மூலம் மடல் விரியும் தேவனுடைய திட்டத்தைப் பின்பற்று கின்ற எவரொருவரும் இந்த நிகழ்வின் மீது வைக்கப்படும் வலியுறுத் தத்தினால் மட்டுமே (கூட) தூண்டப்பட்டவராக, "சபை வந்த பொழுது, புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் அதை எவ்வாறு குறிப்பிட்டார்கள்? அதற்குப் பயன்படுத்தப்படும் பெயர்கள் யாவை?" என்று கேட்பார்கள்.*

*ஒருவர் தொடர்ந்து படிக்கையில், பல குறிப்புகளும் விவரிப்புகளும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கண்டு பிடிப்பார். இது "தேவனுடைய சபை"யாக (1 கொரி. 1:2) அல்லது "தேவனுடைய சபைகளாக" (1 தெச. 2:14) உள்ளது; இது "முதற்பேறானவர்களின் சபையாக" உள்ளது (எபி. 12:23); இது "பரிசுத்தவான்களுடைய சபைகளாக" உள்ளது (1 கொரி. 14:33). இது மிகவும் அடிக்கடி, "சபை" (எபே. 1:22) என்று மட்டும் குறிப்பிடப் படுகின்றது அல்லது "ஆசியாவில் உள்ள சபைகள்" (1 கொரி. 16:19) என்பது போல ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள சபை என்ற வகையில் குறிப்பிடப்படுகின்றது.[1]*

*புதிய ஏற்பாட்டின் சபைக்குப் பரிசுத்த ஆவியானவரால் பெயர் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. நீங்கள் வேத வசனங்களில் கல்வாரி மலை சபை, சீயோன் கிருபையினால் மீட்கும் சபை, பரிசுத்த கல்லறையின் சபை முதலிய வகையில் இதைக் குறிப்பிடுவதை எங்கும் காண மாட்டீர்கள். இது தன் உரிமையாளரைக் குறிக்கும், தனக்குள் இருப்பவர்களைக் குறிக்கும், தான் இருக்கும் இடத்தைக் குறிக்கும் அல்லது தான் என்னவாக உள்ளது என்பதைக் குறிக்கும் சொற்றொடர்களால் குறிப்பிடப்படுகின்றது, ஆனால் இது ஒருக்காலும் பெயரிடப்படவில்லை.*

*வேத வசனங்களில் "சபை" முன்னிறுத்தப்படும் வழியின் வனப்பு மிக்க எளிமைத் தன்மை நம்மை உறைய வைக்கின்றது. புதிய ஏற்பாடு எழுதப் பட்ட நாட்களில் ஒருவர் அதனுள் இருந்தார் அல்லது அதனுள் இராதிருந்தார்; ஒருவர் சபையில் இருந்தார் அல்லது உலகில் இருந்தார். இன்றைய நாட்களில் நாமகரணத்துவத்தின் சரிவின் காரணமாக, அதன் மனித சட்டங்கள் மற்றும் மனிதப் பெயர்களின் காரணமாக, மத உலகத்தினால் அவிசுவாசிக்குச் சித்தரிக்கப்படும் சித்திரமானது மிகுந்த அறிவொளியும் புத்திக் கூர்மையும் உள்ள மக்களைக் கூட குழப்பித் திகைக்கச் செய்யக் கூடிய பேரளவிலான கூக்குரலாகவே உள்ளது. உலக முழுவதிலும் உள்ள நாமகரணத்துவத்தின் விழுங்கும் செல்வாக்கு மற்றும் பிரசன்னம் என்பதைக் காட்டிலும் அதிகமாக, இயேசு கட்டிய சபையை -*

புதிய ஏற்பாட்டு சபையை - அதன் நேர்மை, எளிமை, மற்றும் வனப்பு ஆகியவற்றை மூடி மறைக்க வேறு ஏதொன்றும் செய்யப்படவில்லை. புதிய ஏற்பாட்டின் அழைப்பானது நாம் ஒவ்வொருவரும் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களாக, புதிய ஏற்பாட்டு சபையின் உறுப்பினர்களாக இருந்து, கிறிஸ்துவுக்கும் புதிய ஏற்பாடாகிய அவருடைய வசனத்திற்கும் மட்டுமே சார்புள்ளவர்களாய் இருக்கும்படி தவறற்ற வகையில் உள்ளது.

சபைக்கான புதிய ஏற்பாட்டு அடையாளங்களில் ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு, நம்மை நாமகரணப் படுத்திக்கொண்டு, ஒரு குழுவாக்கிக் கொண்டு, புதிய ஏற்பாடு பயன்படுத்துகின்ற மற்ற எல்லா அடையாளங்களையும் புறம்பே ஒதுக்கி விடுவதோ அல்லது தவிர்த்து விடுவதோ தவறானதாக இருக்கும். புதிய ஏற்பாட்டின்படியான உண்மைச் சபையானது அதற்குப் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள எல்லா இயற்பெயர்கள் மற்றும் விவரிப்புகளினாலும் அறியப்பட வேண்டியதாக உள்ளது. சபை என்றால் என்ன, யார் அதை உரிமை கொண்டுள்ளார், அல்லது யார் அதில் இருக்கிறார் என்பது பற்றிய முக்கியமான உட் கண்ணோட்டத்தை ஒவ்வொரு சொல் விளக்கமும் நமக்கு அளிக்கின்றது. ஒவ்வொரு குறிப்பும் மதிப்பு மிக்கது மற்றும் அது சபைக்குப் பயன் படுத்தப்பட வேண்டும், ஆனால் இவைகள் புதிய ஏற்பாட்டில் பயன் படுத்தப்பட்டுள்ள அதே வழிமுறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது இன்றியமையாததாக உள்ளது. மதத்தில் சபையைப் பற்றிய பெரும் குழப்பத்திற்கு இரு காரணங்கள் உள்ளன. அவை, புதிய ஏற்பாட்டில் அறியப்படாத பெயர்களைச் சபைக்குப் பயன்படுத்துவதும் மற்றும் சபைக்கான புதிய ஏற்பாட்டுப் பெயர்களைத் தவறாகப் பயன்படுத்துவதும் ஆகும்.

புதிய ஏற்பாட்டைப் பின்பற்றுவதாக உரிமைகோரியும் அதற்கான உண்மையான ஆதாரமும் எதையும் காண்பிக்காத நாமகரணக் கூட்டம் ஒன்றைப் பற்றிக் கதையொன்று கூறப்படுகின்றது. அவர்கள் தங்கள் கட்டிடத்தின் முன்பாக ஒரு புதிய பெயர்ப் பலகையொன்றை வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் உறுப்பினர் ஒருவரிடத்தில் பேசிய புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர் ஒருவர், "உங்கள் குழுவானது உங்கள் கட்டிடத்தின் முன்பாகப் புதிய பெயர்ப் பலகையொன்றை வைப்பதை நான் பார்க்கின்றேனே" என்றார். அதற்கு அந்த உறுப்பினர், "ஆம், அதைக் குறித்து நாங்கள் பெருமைப்படுவோம்" என்று சொன்னார். அதற்குக் கிறிஸ்தவர், "அந்தப் பெயர்ப் பலகையில் உங்கள் நாமகரணக் கூட்டத்தின் பெயருக்குப் பதிலாக 'இது கிறிஸ்துவின் சபை' என்ற வார்த்தைகளை மட்டும் எழுதினால் உங்கள் பெயர்ப் பலகையை வைக்கும் செலவுக்கு நான் 2500 ரூபாய் நன்கொடை அளிப்பேன்" என்று கூறினார். அந்த உறுப்பினர், "ஓஹோ, இல்லை! நாங்கள் அதைச் செய்ய முடியாது; நாங்கள் எங்கள் நாமகரணக் கூட்டத்தின் பெயரை அந்தப் பெயர்ப் பலகையில் எழுதியாக வேண்டும்" என்றார். அதன் பிறகு அந்தக் கிறிஸ்தவர், "சரி. நீங்கள் உங்கள் பெயர் பலகையில், 'இது கிறிஸ்துவின் சபை அல்ல' என்று எழுதினால் நான் அந்தப் பெயர்ப் பலகையை வைக்கும் செலவுக்கு 2,500 ரூபாய் நன்கொடை

*அளிப்பேன்" என்று கூறினார். அதற்கு அந்த உறுப்பினர், "நாங்கள் அதைச் செய்ய முடியாது; நாங்கள் கிறிஸ்துவின் ஒரு சபையாராய் இருக்கிறோம்" என்று கூறினார்!*

*இந்தச் சிறு கதையானது உண்மையாய் இருக்கும் உட்கருத்தைக் கொண்டுள்ளது. ஒரு குழுவானது தான் கிறிஸ்துவின் சபையாக இருப்பதாக உரிமைகோரிக் கொண்டு, அதே வேளையில் தங்கள் பெயர்ப் பலகையில் அதைக் குறிப்பிட விரும்பாமல் அதற்குப் பதிலாகத் தங்கள் நாமகரணக் கூட்டத்தின் பெயரை எழுத விரும்புவது வினோதமானதாக இல்லையா? நமது பற்றுறுதியானது நாம் சூடிக் கொள்ளத் தேர்ந்து கொள்ளும் இயற் பெயரை அல்லது பெயரைத் தீர்மானிக்கின்றது.*

*ஆபிரகாம் லிங்கன் அவர்கள், ஒருமுறை ஒரு மனிதரிடம், "கன்றுக் குட்டியின் வாலை(யும்) கால் என்று நாம் அழைப்போமென்றால், கன்றுக் குட்டிக்கு எத்தனை கால்கள் இருக்கும்?" என்று கேட்டார். அம்மனிதர் விரைவாக, "அதற்கு ஐந்து கால்கள் இருக்கும்!" என்றார். திருவாளர் லிங்கன், "இல்லை. கன்றுக்குட்டிக்கு நான்கு கால்கள் தான் இருக்கும். வாலைக் கால் என்று சொல்வதினால் வால் காலாகி விடாது" என்று பதில் கூறினார். அவரது கூற்றின் உண்மையானது தவறற்றதாக உள்ளது. ஒரு குழுவானது தன்னைத்தானே கிறிஸ்துவின் சபை என்று அழைத்துக் கொள்ளுதல் என்பது, அவர்கள் கிறிஸ்துவின் சபையாராக உள்ளனர் என்று நிரூபித்து விடுவதில்லை. இருப்பினும், வேறொரு சிந்தனையும் ஆழ்ந்து கவனிக்கப் பட வேண்டும்: நாம் கிறிஸ்துவின் சபையாராக இருக்க வேண்டும் என்று உண்மையிலேயே நாட்டம் கொண்டிருந்தால், நாம் அப்படிப்பட்டவர் களாயிருக்கிறோம் என்று குறிப்பிடுவோம் என்பது நிச்சயம். நாம் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறோம் என்று நம்மையே அழைத்துக் கொள்ள மறுப்பதைப் போலவோ, நாம் எவ்வாறு இல்லையோ அவ்வாறு நம்மை அழைத்துக்கொள்ளுவதும் சரியற்றதாகவே உள்ளது.*

*இன்றைய நாட்களில் மத உலகின் உண்மைத் தேவையானது (முன்) ஒருக்காலும் இதை விட அதிகம் தெளிவானதாக இருந்ததில்லை: நாம் வேதாகமத்திற்குத் திரும்பி, புதிய ஏற்பாட்டு சபை என்ற வகையில் புதிய ஏற்பாட்டின் கிறிஸ்தவர்களாயிருந்து கிறிஸ்துவுக்கும் அவரது வசனத்திற்கும் மட்டுமே பற்றுறுதியைக் காண்பிக்கின்றவர்களாய் இருக்க வேண்டும். நமது மத உலகில் உள்ள சபைகள் "சபை" என்பதாக மட்டும், மற்றும் கிறிஸ்தவர் கள் கிறிஸ்தவர்களாக மட்டும் இருந்தால், மதக் குழப்பங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனி போல, ஒளியைக் கொண்ட இருள் போல ஓடி ஒளிந்து விடும். எந்த வகையான ஒதுக்கீடும் வளப்படுத்தப்பட முடியாது; நாம் நமது இருதயங்களையும் ஊழியத்தையும் கிறிஸ்துவுக்கும் அவரது வசனத்திற்கும் மட்டுமே - அது என்ன அர்த்தப்படுத்தினாலும், எங்கு வழி நடத்தினாலும், மற்றும் அது என்ன விலையானாலும் - கொடுக்க வேண்டும்.*

## *முடிவுரை*

*"கிறிஸ்துவின் சபையார்" என்ற சொற்றொடரானது சிறியதாகவும்,*

கவனிக்க முடியாததாகவும் இருப்பினும் கூட, கேட்டுக் கவனிக்கும் யாவருக்கும் இது ஒரு வல்லமையான செய்தியைக் கொண்டுள்ளது. இது சபையைப் பற்றிய தனிச் சிறப்பான சத்தியங்களை மறைமுகமாய் அறிவிக்கின்றது. முதலாவது, இது சபையின் உண்மை நிலையை வெளிப்படுத்துகின்றது. ரோமருக்குப் பவுல் எழுதிய பொழுது, உலக வரை படத்தில் கிறிஸ்துவின் சபைகள் பல குறிப்பிடப்பட்டிருந்தன. இரண்டாவது, இது கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையில் உள்ள வலிவார்ந்த உறவைத் தெரிவிக்கின்றது. சபை என்பது கிறிஸ்துவின் சபையாக உள்ளது. இது அவருக்குரியது, மற்றும் இது அவருடைய ஆவிக்குரிய சரீரமாகப் பணியாற்றுகின்றது. மூன்றாவது, இந்தச் சொற்றொடரானது, பவுலின் நாளில் புதிய ஏற்பாட்டு சபை பெயர் குறிப்பிடப்பட்டிருந்த (ஒரே) ஒரு வழி முறையைக் காண்பிக்கின்றது.

நமது கர்த்தர் விசாரணை செய்யப்பட்ட இரவிலே, பேதுரு வெளிமுற்றத்தில் கூடியிருந்த கும்பல் ஒன்றுடன் காத்திருந்தார். அவர் வாசலருகில் சென்ற வேளையில், அங்கு நின்றிருந்த ஒருவன் அவரைக் கேள்வி கேட்டான். “மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன்; உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது” (மத். 26:73). பேதுரு கும்பலுடன் காத்திருந்த வேளையில் அவர் மற்றவர்களுடன் அதிகமாய் ஒன்றும் பேசவில்லை என்று காணப்படுகின்றது; ஆனால் குறைந்தபட்சமாக, அருகில் நின்றிருந்தவர் களில் ஒருவனுடைய கூற்றினாலாவது, பேதுரு தம்மை இயேசுவின் சீஷர் என்று அடையாளப்படுத்தப் போதுமானவற்றைக் கூறியிருந்தார் என்பது தெளிவாகின்றது. இந்த நிகழ்ச்சியில், ஒரு சில வார்த்தைகளே அவரது அடையாளத்தை வெளிப்படுத்தின.

“கிறிஸ்துவின் சபையார்” என்ற இரு வார்த்தைகள், சபை என்றால் என்ன என்று நம் கண்களைத் திறக்கச் செய்வதாலும், மற்றும் நமது பற்று றுதிக்கும் அன்புக்கும் சரியான கவன ஈர்ப்பை நமக்குக் கொடுப்பதாலும் கிறிஸ்தவர்களின் உண்மை அடையாளத்தை வெளிப்படுத்துகின்றன. சபை என்பது கிறிஸ்துவின் உடமையாக, அவருடைய ஆவிக்குரிய சரீரமாக உள்ளது.

சபையை “கிறிஸ்துவின் சபை” என்று மிகச் சரியாக அழைப்பதைக் காட்டிலும் பெரிய பாராட்டினை சபைக்குக் கொடுக்க முடியாது. ஒரு குழுவானது தங்களைக் கிறிஸ்துவின் சபையார் என்று கூறிக் கொள்வதில் பதிந்துள்ள பேரார்வத்தைக் காட்டிலும் வேறெந்த மாண்புமிக்க தீர்மானத்தையும் அவர்கள் மேற்கொள்ள முடியாது. வின்ஸ்ட்டன் சர்ச்சில் என்பவர், “ஒருவருக்குள் நல்லொழுக்கத்தை உண்டாக்குவதற்கு, அவர் நல்லொழுக்கம் உள்ளவர் என்று பண்புபடுத்துவதே மிகச் சிறந்த வழியாகும்” என்று கூறினார். நாம் நம்மைக் கிறிஸ்துவின் சபை என்று குறிப்பிட்டுக் கொள்ளும் பொழுது, நாம் அவ்வாறு இருப்பதாக அவ்வாறு ஆவதாகத்தேர்ந்து கொண்டுள்ளதை எல்லாரும் காணும்படி தெளிவாக்குகின்றோம்.

கிறிஸ்து யார் என்று அறிந்த நிலையில், நீங்கள், அவர் கட்டி யெழுப்பியதும் அவருக்கு உரிமையுள்ளதுமாகிய அவருடைய சபையில்

*அங்கமாயிருக்க விரும்புவீர்கள். உங்கள் இருதயத்தில் "கிறிஸ்துவின் சபை" என்று எழுதப்பட்டுள்ள பெயர்ப் பலகையைக் கொண்டுள்ளீர்களா?*

குறிப்பு

[1]*மற்ற இடங்களிலுள்ள ''சபைகள்'' பற்றிக் கூறப்பட்டிருப்பவைகள்: "கலாத்தியாவின் சபைகள்" (1 கொரி. 16:1; கலா. 1:2), "யூதேயாவிலுள்ள சபைகள்" (கலா. 1:22), "லவோதிக்கேயாவில் உள்ள சபைகள்" (கொலோ. 4:16) மற்றும் "தெசலோனிக்கேயில் உள்ள சபைகள்" (1 தெச. 1:1).*

## படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

*1. "சிபொலேத்" என்பது எப்பிராயீமரை எவ்வாறு அடையாளப் படுத்திற்று?*
*2. சபை எப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டது?*
*3. யோவான் ஸ்நானன் சபையை எவ்வாறு குறிப்பிட்டார்?*
*4. கிறிஸ்து, சபையுடன் நிலைநிறுத்துகின்ற பல்வேறு உறவுமுறைகளை அட்டவணைப்படுத்துக. ஒவ்வொரு உறவுமுறைக்கும் வேத வசனங்களில் இருந்து ஆதாரம் தரவும்.*
*5. சபை கிறிஸ்துவுக்கு உரியது என்பதை மெய்ப்பிக்கவும்.*
*6. சபையானது புதிய ஏற்பாட்டில் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது?*
*7. புதிய ஏற்பாட்டில் எப்பொழுதாவது சபைக்குப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா?*
*8. புதிய ஏற்பாட்டு சபையைக் குறித்து இன்றைய நாளில் தேவையான உறுதிப்பாட்டினைத் தொகுத்துரைக்கவும்.*
*9. இன்றைய நாட்களில் ஒரு சபையானது பெற்றுக் கொள்ளக் கூடிய மிகப் பெரிய பாராட்டு என்ன?*
*10. இயேசு விசாரிக்கப்பட்ட இரவில் பேதுரு எவ்வாறு அடையாளம் காணப்பட்டார்?*